DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.364/2019

PROSECUTION WITNESS L.W.7/P.W. 4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதீஷ் | தகப்பனார் பெயர் | முத்து |
| கிராமம் | முள்ளாம்பரப்பு | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

1, 2 எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 10.03.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு முள்ளாம்பரப்பில் குடியிருந்து வருகிறேன். டெக்ஸ்டைல்ஸ் – ல் வேலை செய்து வருகிறேன்.

2) கடந்த 13.12.2018 ம் தேதி, கஸ்பா பேட்டையில் இருந்து நானும் எனது நண்பர் தனசேகரும் ஈரோடு நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, அன்னமார் பெட்ரோல் பங்க் முன்பாக போலீசார் சோதனை செய்து கொண்டிருந்தனர். அப்போது கருப்பு கலர் பைக்கில் வந்த இரண்டு நபர்கள் போலீசாரைப் பார்த்ததும் இரு சக்கர வாகனத்தை திருப்பிக் கொண்டு சென்றார்கள். ஆஜர் எதிரிகள் தான் கருப்பு கலர் பைக்கில் வந்த நபர்கள். போலீசார் துரத்தி பிடித்து அவர்களை விசாரித்தார்கள். அவர்கள் முன்னுக்குபின் முரணாக பதில் கூறினார்கள். போலீசார் அவர்களை விசாரித்தபோது அவர்கள் பெயர் டேவிட், பாஷா எனக் கூறினார்கள். முத்தம்பாளையத்தில் தங்க சங்கிலியை திருடிச் சென்றதை பாஷா ஒப்புக் கொண்டார். போலீசார் அவர்களை விசாரித்து லேப்டாப்பில் டைப் செய்து வாக்குமூலம் பெற்றார்கள். பின்னர் பிரிண்ட் எடுத்த வாக்குமூலத்தில் நானும் தனசேகரும் கையொப்பம் செய்தேன். போலீசாரிடம் இரு சக்கர வாகனத்தை டேவிட் ஆஜர் செய்தார். தங்க தாலிக் கொடியை பாஷா போலீசாரிடம் ஆஜர் செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் டேவிட் (எ) சாமுவேல் ராஜ்குமார், அலாவூதின் பாஷா ஆகியோர்களின் ஒப்புதல்

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 17:59:44 +0530

வாக்குமூலங்களிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். (**டேவிட் (எ) சாமுவேல் ராஜ்குமார், அலாவுதின் பாஷா ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களிலுள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்னிடம் காண்பிக்கப்படும் TN47 P 1240 பதிவெண் கொண்ட கருப்பு நிற பஜாஜ் சிடி 100 பைக் மற்றும் அதன் சாவி மற்றும் சுமார் 6 பவுன் எடையுள்ள அறுந்த நிலையில் இருந்த தங்க தாலிக் கொடி ஆகியவற்றை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர்களிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். (**TN47 P 1240 பதிவெண் கொண்ட கருப்பு நிற பஜாஜ் சிடி 100 பைக் மற்றும் அதன் சாவி மற்றும் சுமார் 6 பவுன் எடையுள்ள அறுந்த நிலையில் இருந்த தங்க தாலிக் கொடி ஆகியவற்றை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர்கள் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் தங்கத் தாலிக் கொடியை தற்போது பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 2018 ம் ஆண்டு நான் டெக்ஸ்டைஸ் – ல் வேலை செய்து கொண்டிருந்தேன். தனசேகர் டிரான்ஸ்போர்ட் வைத்திருந்தார். கஸ்பாபேட்டையில் இருந்து நாங்கள் கிளம்பும்போது மணி 2.45 இருக்கும். போலீசார் நின்று கொண்டிருந்ததாக நான் சொல்லிய பகுதி 4 சாலைகள் சந்திக்கும் பகுதி என்றால் சரிதான். குறிப்பாக எந்த சாலையில் உள்ள பகுதியில் போலீசார் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் பெட்ரோல் பங்கிற்கு முன்பு பூந்துறை செல்லும் சாலையில் போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். பெட்ரோல் பங்கிற்கு இரண்டு பக்கங்களிலும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். பெட்ரோல் பங்கிற்கு முன்புறமாக பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான். பெட்ரோல் பங்கிற்கு எதிர்புறம் ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். ஆட்டோ ஸ்டாண்டை ஒட்டி இரண்டு பக்கங்களிலும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். போலீசார் நின்று கொண்டிருந்ததாக நான் சொல்லிய பகுதியில் ஜன நடமாட்டம், வாகன போக்குவரத்து அதிகம் இருக்கும் என்றால் சரிதான். போலீசார் நிறைய

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 17:59:49 +0530

நபர்களிடம் லைசென்ஸ் மற்றும் ஆவணங்களை பார்த்து சோதனை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் ஆமாம். என்னையும் போலீசார் ஆவணங்களை வாங்கி சோதனை செய்தார்கள் என்றால் ஆமாம். போலீசார் நிறைய பேர் மீது பெட்டி கேஸ் பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம். போலீசாரை பார்த்ததும் இரு சக்கர வாகனத்தில் வந்தவர்கள் சுமார் ஒரு பர்லாங் தூரம் திரும்பி சென்றிருப்பார்களா என்றால் சென்றிருப்பார்கள். அவர்கள் பூந்துறை செல்லும் சாலையில் சென்றார்கள். அந்த இடத்தில் 3,4 போலீசார்கள் இருந்தனர். 2 போலீசார் இரு சக்கர வாகனத்தில் துரத்தி சென்று அவர்களை பிடித்தார்கள். போலீசார் அவர்களை பிடித்து இரண்டு இரு சக்கர வாகனங்களிலும் அவர்களை அழைத்து வந்தார்கள் என்றால் ஆமாம். போலீசார் அவர்களை சத்தம் போட்டு திட்டினார்கள் என்றால் சரிதான். அங்கிருந்த 4 போலீசாரும் அவர்களை துருவித் துருவி நிறைய கேள்விகள் கேட்டார்கள். அவர்கள் இருவரையும் போலீசார் முழுவதுமாக சோதனை செய்தார்கள் என்றால் சரிதான். அவர்களிடமிருந்து செல்போன் மற்றும் பொருட்களை கைப்பற்றி போலீஸ் ஜீப்பின் மீது வைத்தார்களா என்றால் இல்லை. இருவரையும் போலீசார் தனித்தனியாக விசாரித்து வெள்ளை தாளில் நோட் செய்து லேப்டாப்பில் தட்டச்சு செய்தார்கள் என்றால் ஆமாம். அந்த சமயத்தில் 10,20 நபர்கள் கூடியிருந்தார்கள். அனைத்து போலீசாரும் சீருடையில் தான் இருந்தனர். போலீசார் பெட்ரோல் பங்கிற்குள் சென்று விசாரித்து, எழுதி, லேப்டாப்பில் தட்டச்சு செய்தார்களா என்றால் இல்லை. ரோட்டில் வைத்து தான் தட்டச்சு செய்தார்கள். நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 3 கையெழுத்து செய்தேன். லேப்டாப்பில் பதிவு செய்தவரின் பெயர், பதவி தெரியுமா என்றால் தெரியாது. பொருட்கள் கைப்பற்றியதை லேப்டாப்பில் தான் தட்டச்சு செய்தார்கள். லேப்டாப்பில் தட்டச்சு செய்ததை காவல்நிலையத்திற்கு சென்று பிரிண்ட் எடுக்கும் வரை நான் அங்கேயே இருந்தேனா என்றால் காவல்நிலையத்திற்கு சென்று பிரிண்ட் எடுக்கவில்லை. பக்கத்தில் உள்ள கடைக்கு சென்று பிரிண்ட் எடுத்து வந்தார்கள். எந்த கடை என்பது எனக்கு தெரியாது. இருசக்கர வாகனத்தை கைப்பற்றிய ஆவணத்தை தயார் செய்வதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் ஒரு மணி நேரம் ஆனது. மற்றொரு பொருளை கைப்பற்றிய ஆவணத்தை தயார் செய்வதற்கு எவ்வளவு நேரம் ஆனது

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 17:59:55 +0530

என்றால் ஒரு மணி நேரம் ஆனது. ஒரு நபரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்தவதற்கு 10 நிமிடங்கள் ஆனது. மற்றொரு நபரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்தவதற்கு அரை மணி நேரம் ஆனது. வாக்குமூலத்தில் முழுவதுமாக என்ன இருந்தது என்பதை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. இரண்டாவதாக கொடுக்கப்பட்ட வாக்குமூலம் எத்தனை பக்கம் இருக்கும் என்றால் சரியாக சொல்ல முடியாது. முதலாவதாக கொடுக்கப்பட்ட வாக்குமூலம் எத்தனை பக்கம் இருக்கும் என்றால் சரியாக சொல்ல முடியாது. தங்க தாலிக் கொடியின் மாடல் என்னவென்று என்னால் சொல்ல முடியாது. நான் சொன்ன தேதி, நேரம், இடத்தில் நானும் தனசேகரும் அன்னமார் பெட்ரோல் பங்க் பக்கம் செல்லவில்லை என்றும், போலீசார் அங்கு வாகன சோதனை செய்யவில்லை என்றும், அந்த இடத்தில் 2 எதிரிகளும் சிடி பஜாஜ் பைக்கில் வரவில்லை என்றும், எதிரிகள் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதன்படி பைக் மற்றும் தங்க செயினை போலீசார் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இதற்கு முன்பாக எதிரிகளை நான் பார்த்ததில்லை என்றாலும் போலீசார் இன்று தான் முதன்முதலாக நீதிமன்றத்திற்கு வெளியே வைத்து எதிரிகளை அடையாளம் காண்பித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஈரோடு தாலுக்கா காவல்நிலையத்தில் வைத்து பூர்த்தி செய்ப்படாத படிவங்களிலும் வெற்றுத்தாள்களிலும் கையொப்பம் செய்து விட்டு தற்போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:00:01 +0530

Judicial Magistrate No.I,
Erode.